பெரியாழ்வார் அருளிச் செய்த
பெரியாழ்வார் திருமொழி
ஐந்தாம் பத்து

இரண்டாம் திருமொழி - நெய்க்குடத்தை தம்மிடத்து எம்பெருமான் திருப்பதிகளிற் போலே விரும்பிப் புகுந்ததனால், நோய்களை அகலும்படி ஆழ்வார் கூறுதல்

** நெய்க்குடத்தைப் பற்றி * ஏறும் எறும்புகள் போல் நிரந்து * எங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்! * காலம் பெற உய்யப் போமின் **
மெய்க்கொண்டு வந்து புகுந்து * வேதப்பிரானார் கிடந்தார் *
பைக்கொண்ட பாம்பணையோடும் * பண்டன்று பட்டினம் காப்பே 1

சித்திரகுத்தன் எழுத்தால் * தென்புலக்கோன் பொறி ஒற்றி *
வைத்த இலச்சினை மாற்றித் * தூதுவர் ஓடி ஒளித்தார் **
முத்துத் திரைக்கடற் சேர்ப்பன் * மூதறிவாளர் முதல்வன் *
பத்தர்க்கமுதன் அடியேன் * பண்டன்று பட்டினம் காப்பே 2

வயிற்றில் தொழுவைப் பிரித்து * வன்புலச் சேவை அதக்கி *
கயிற்றும் அக்காணி கழித்துக் * காலிடைப் பாசம் கழற்றி **
எயிற்றிடை மண் கொண்ட எந்தை * இராப்பகல் ஓதுவித்து * என்னைப்
பயிற்றிப் பணி செய்யக் கொண்டான் * பண்டன்று பட்டினம் காப்பே 3

மங்கிய வல்வினை நோய்காள்! * உமக்கும் ஓர் வல்வினை கண்டீர் *
இங்குப் புகேன்மின் புகேன்மின் * எளிதன்று கண்டீர் புகேன்மின் **
சிங்கப்பிரான் அவன் எம்மான் * சேரும் திருக்கோயில் கண்டீர் *
பங்கப்படாது உய்யப் போமின் * பண்டன்று பட்டினம் காப்பே 4

மாணிக்குறள் உருவாய * மாயனை என் மனத்துள்ளே *
பேணிக் கொணர்ந்து புகுத வைத்துக் கொண்டேன் * பிறிதின்றி **
மாணிக்கப் பண்டாரம் கண்டீர் * வலி வன்குறும்பர்கள் உள்ளீர்! *
பாணிக்க வேண்டா நடமின் * பண்டன்று பட்டினம் காப்பே 5

உற்ற உறு பிணி நோய்காள்! * உமக்கொன்று சொல்லுகேன் கேண்மின் *
பெற்றங்கள் மேய்க்கும் பிரானார் * பேணும் திருக்கோயில் கண்டீர் **
அற்றம் உரைக்கின்றேன் * இன்னம் ஆழ்வினைகாள்! * உமக்கிங்கோர்
பற்றில்லை கண்டீர் நடமின் * பண்டன்று பட்டினம் காப்பே 6

கொங்கைச் சிறுவரை என்னும் * பொதும்பினில் வீழ்ந்து வழுக்கி *
அங்கோர் முழையினில் புக்கிட்டு * அழுந்திக் கிடந்துழல்வேனை **
வங்கக்கடல் வண்ணன் அம்மான் * வல்வினை ஆயின மாற்றி *
பங்கப்படா வண்ணம் செய்தான் * பண்டன்று பட்டினம் காப்பே 7

ஏதங்கள் ஆயின எல்லாம் * இறங்கல் இடுவித்து * என்னுள்ளே
பீதக ஆடைப் பிரானார் * பிரம குருவாகி வந்து **
போதில் கமல வன்னெஞ்சம் * புகுந்தும் என் சென்னித் திடரில் *
பாத இலச்சினை வைத்தார் * பண்டன்று பட்டினம் காப்பே 8

** உறகல் உறகல் உறகல் * ஒண்சுடர் ஆழியே! சங்கே! *
அறவெறி நாந்தக வாளே! * அழகிய சார்ங்கமே! தண்டே! **
இறவு படாமல் இருந்த * எண்மர் உலோகபாலீர்காள்! *
பறவை அரையா! உறகல் * பள்ளி அறைக் குறிக் கோண்மின் 9

** அரவத்து அமளியினோடும் * அழகிய பாற்கடலோடும் *
அரவிந்தப் பாவையும் தானும் * அகம்படி வந்து புகுந்து **
பரவைத் திரை பல மோதப் * பள்ளி கொள்கின்ற பிரானை *
பரவுகின்றான் விட்டுசித்தன் * பட்டினம் காவற் பொருட்டே 10

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்